மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 60/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | K.R.மணி | நாள் | 15.03.2023 |
| தகப்பனார் பெயர் | இராமசாமி கவுண்டர் | | |

**5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:-**

1) இவ்வழக்கில் அரசு தரப்பினரை எத்தனையாவது பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துள்ளேன் என்றால், சரியாக நினைவில்லை. அரசாங்கத்தினர் யார் யாரை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால், சார் ஆட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன்.

2) மேற்படி அரசு தரப்பினர்களுக்கு எதிராக நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளேன். எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்திற்காக மேற்படி பரிகாரத்தை நான் கேட்டுள்ளேன் என்றால், ச.எண்.277/6A ல் உள்ள 15 செண்ட் நிலம் குறித்து மேற்படி பரிகாரம் கோரியுள்ளேன். மேற்படி 15 செண்ட் நிலம் என் மனைவியின் குடும்ப சொத்து ஆகும். 1ம் பிரதிவாதி செங்கோடன் சார் ஆட்சியரிடம் ஒரு தவறான விண்ணப்பத்தை கொடுத்து அதன் அடிப்படையில் அரசு துறையினரால், எங்களுக்கு எதிராக ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

3) இவ்வழக்கில் நான் 1ம் வாதியான என் மனைவிக்காக இவ்வழக்கை அவரது பொது முகவர் என்ற அடிப்படையில் நடத்தி வருகிறேன். மேற்படி பொது அதிகாரப் பத்திரம் யார் எனக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால், என் மனைவி எனக்கு எழுதிக்கொடுத்தார். மேற்படி பொது அதிகார பத்திரத்தில் எனக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது என்றால், மேற்படி பிரச்சனைக்குரிய நிலம் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் பங்கேற்று நடத்திட எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

4) மேற்படி பொது அதிகாரப் பத்திரம் என்ன தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால்,

இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 15 நாட்களுக்கு முன்னர் மேற்படி பத்திரம் எழுதப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது. தேதி சரியாக நினைவில்லை. நான் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப் படிக்க தெரியும்.

5) இவ்வழக்கை நான்தான் நேரடியாக தாக்கல் செய்தேன். வருவாய் துறையினரிடம் இவ்வழக்கு சொத்து குறித்து விசாரணை நிலுவையில் இருக்கும் போது இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். ஆனால் மேற்படி வருவாய் துறையினரிடமிருந்து இவ்வழக்கு சொத்து குறித்து நடைபெற்ற விசாரணையில் எங்கள் தரப்பை கேட்காமலேயே அதில் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

6) மேற்படி வருவாய் துறையினரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு குறித்து எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 மாதத்திற்கு முன்பு வழக்கு சொத்து குறித்து என் பெயருக்கு சார் ஆட்சியரிடமிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றது. தேதி சரியாக நினைவில்லை.

7) என் மனைவி எதற்காக எனக்கு பொது அதிகாரம் அளித்துள்ளார் என்றால், அவருக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் செவித்திறன் பிரச்சனைகள் உள்ளதாலும், அவருக்கு போதுமான கல்வி அறிவு இல்லாததாலும் இவ்வழக்கை நடத்துவதற்காக என்னை அவரது பொது அதிகார முகவராக நியமித்தார். என் மனைவிக்கு மேற்படி பாதிப்புகள் எப்போதிருந்து உள்ளது என்றால், சுமார் 10 வருடங்களுக்கு மேலாகவே உள்ளது.

8) மேற்படி 10 ஆண்டுகளாகவே என் மனைவி சுயமாக வெளியில் எங்கும் செல்வதில்லை என்றால், சரிதான். இவ்வழக்கை அரசு தரப்பினர்களுக்கு எதிராக தாக்கல் செய்து பரிகாரம் கோரியுள்ளதால், இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு உ.வி.மு.ச.பிரிவு 80 ன் படி மேற்படி அரசு தரப்பினருக்கு உரிய அறிவிப்பு வழங்கிவிட்டுதான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்ய இயலும் என்றாலும், அவ்வாறு நான் எந்த அறிவிப்பும் இவ்வழக்கை பொறுத்தவரை அனுப்பவில்லை என்றாலும், சரியல்ல. நான் அனுப்பியுள்ளேன்.

9) நான் சொல்வது போல் அரசு தரப்பினரை பொறுத்து நான் எந்த முன்அறிவிப்பும் அனுப்பவில்லை என்றாலும், தற்போது இவ்வழக்கிற்காக அவ்வாறு அனுப்பியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

10) என் பிரமாண பத்திரிக்கையில் அரசு தரப்பினர் பட்டா பாஸ்புக் சட்டம், வருவாய் நிலை ஆணைகள், சர்வே சக்குபந்தி சட்டம் ஆகியவற்றிற்கு முரணாக செயல்பட்டுள்ளனர் என நான் குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி சட்டங்கள் குறித்து எனக்கு போதுமான அறிவு உள்ளது என்றால், அதுகுறித்து என் வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

11) மேற்படி பட்டா பாஸ்புக் சட்டத்தின் படி வட்டாட்சியரின் நடவடிக்கைக்கு எதிராக மேல் நடவடிக்கை சார் ஆட்சியரிடம் செல்ல வேண்டும் என்றாலும், அவரது உத்தரவிற்கு மேல் மாவட்ட வருவாய் அலுவலரிடம் செல்ல வேண்டும் என்றாலும், மேற்கண்ட எந்த நடைமுறைகளையும் கடைபிடிக்காமல் நான் இவ்வழக்கில் வருவாய் அதிகாரிகளையும் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றாலும், சரியல்ல. வருவாய் துறையினர் சரிவர விசாரிக்காததால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

12) வருவாய் துறையினர் சரிவர விசாரணை செய்யவில்லை என நான் சொல்லும் நிலையில், நான் வருவாய் துறை உயர் அதிகாரிகளிடம் மேல் முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால், சரியல்ல. மேல்முறையீடு செய்தும் பலன் இல்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு வருவாய் உயர் அதிகாரிகளிடம் மேல்முறையீடு செய்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அவை என்ன ஆவணங்கள் என்றால், கிராம நிர்வாக அலுவலர் விசாரணை அறிக்கை, வருவாய் ஆய்வாளர் விசாரணை அறிக்கை, வட்டாட்சியரின் விசாரணை அறிக்கை ஆகியவை தாக்கல் செய்துள்ளேன்.

13) தற்போது இவ்வழக்கு தொடர்பாக வருவாய் துறையினரிடம் விசாரணை நிலுவையில் உள்ளதா என்றால், இல்லை.

14) எனக்கு ஆதரவாக வருவாய் துறையினர் செயல்படவில்லை என்ற காரணத்தினால், எவ்வித அடிப்படை முகாந்திரம் இல்லாமல் மேற்படி வருவாய் துறையினருக்கு எதிராக நான் பொய்யான சங்கதிகளை கூறுகிறேன் என்றால், சரியல்ல.

(5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.